தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகம்

# வருடாந்த அறிக்கை 2014

NIOSH

National Institute of Occupational Safety and Health • Sri Lanka

# <u>தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகம்</u>

**திரு. காமினி லொக்குகே**

அமைச்சர் - தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு

**திரு. சரத் வீரசேகர**

பிரதி அமைச்சர் - தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு

**டபிள்யூ.ஜே.எல்.யூ.விஜேவீர**

செயலாளர், தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு

தலைவர், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம்

**டாக்டர் என்.சீ.அமரசிங்க**

பணிப்பாளர் நாயகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம்

**கணக்காய்வாளர் குழு**

டாக்டர் என்.சீ.அமரசிங்க - பணிப்பாளர் நாயகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம்

சீ.சேனாநாயக்க - தலைவர், பிரதிப் பணிப்பாளர், தேசிய திட்டமிடல் திணைக்களம்

டபிள்யூ.டீ.பீ.ஜே.வெலிவத்த - கண்காணிப்பாளர், கணக்காய்வு அதிகாரி, கணக்காய்வாளர் திணைக்களம்

ஈ.டபிள்யூ.ஏ.ஜீ.புன்யசிறி - உள்ளக கணக்காய்வாளர், தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு

பி.எம்.கே.பெரேரா - உதவிப் பணிப்பாளர்,

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம்

வங்கி

மக்கள் வங்கி - நாரஹேன்பிட்டி

# நிர்வாக அமைப்பு


பணிப்பாளர் நாயகம
பணிப்பாளர் (சுகாதாரம் மற்றும் துப்புரவு)
பணிப்பாளர் (பாதுகாப்பு)
பிரதிப் பணிப்பாளர் (சுகாதாரம்)
பிரதிப் பணிப்பாளர் துப்புரவு
உடல்நலம் மற்றும் தொழில்சார் அதிகாரி
தொழில் பாதுகாப்பு அதிகாரி
பிரதிப் பணிப்பாளர் நிர்வாகம
பிரதிப் பணிப்பாளர் நிதி
பிரதிப் பணிப்பாளர் சிவில
பிரதிப் பணிப்பாளர் இயந்திரவிய ல்
பிரதிப் பணிப்பாளர் மின்சாரம் மற்றும் இலத்திரனியல்
சட்டவாக்க அதிகாரி
நூலகர
ஒருங்கிணைப் பு அதிகார
முகாமைத்துவ உதவியாளர் தொழில்நுட்பம் (2)
ஓட்டுநர் (2)
அலுவலக உதவியாளர
தொழில்நுட்பம் அல்லாத முகாமைத்துவ உதவியாளர் (8)



## தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரின் செய்தி

தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான கொள்கை மற்றும் தேசத்தின் தேவைக்கான மஹிந்த சிந்தனைக் கொள்கை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு எதிர்கால நோக்கின் ஊடாக அனைவருக்கும் சுகாதாரமாக வாழ்க்கை அமைய வேண்டும் என்பதே பிரதான குறிக்கோளாக உள்ளது. அதற்காக சுத்தமானதொரு சூழலை அமைத்துக்கொள்வதன் மூலம் சுகாதாரமானதொரு சமூகக் கட்டமைப்பை உருவாக்கிக்கொள்ள முடியும்.

இந்த சுகாதாரமான சமூகக் கட்டமைப்பை உருவாக்கும் நோக்குடனேயே தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழ், தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவனம் உருவாக்கப்பட்டது. இதனூடாக இந்த கட்டமைப்பை உருவாக்குவதென்ற தீர்மானமம் எட்டப்பட்டது. இதனூடாக, ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவத்தின் அவதானம் குறைவான வேலைகளை நிர்மாணித்தல் மற்றும் ஆபத்துள்ள தொழில் வலயமொன்றை உருவாக்குதல் போன்ற விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன. இவை தொடர்பில் ஊழியர்கள் மற்றும் முகாமைத்துவத்துக்கு எடுத்துரைத்து, அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதோடு ஆபத்துக்கள் தொடர்பான பொறுப்புணர்வை முகாமைத்துவத்துக்கு எடுத்துரைத்தல் என்பன இவ்வேலைத்திட்டத்தின் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன.

எவ்வாறாயினும், இதற்கான முழுப் பொறுப்பும் ஊழியர்களைச் சென்றடைவதில்லை. அரசாங்கத்துக்கும் அதற்குச் சமமானதொரு பொறுப்பு கையளிக்கப்படுவதுடன் இவ்வேலைத் திட்டத்துக்கான அடிப்படை வசதிகள் மற்றும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான செயற்பாடுகள் அனைத்தும் அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளன. சட்டக் கொள்கைகளின் ஊடாகவும் இந்த வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்புக்களை வழங்க முடியும். இதற்கான தேசிய கொள்கை மற்றும் தகுந்த முறைமை ஒன்றை ஏற்படுத்துவதன் ஊடாக தொழில் நடவடிக்கைகளின் போது ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

இதேவேளை, ஊழியர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான பொறுப்பு தொழில் தருநர்களிடம் மாத்திரம் கையளிக்கப்படுவது இல்லை. அதற்கான அர்த்தப்படுத்தலும் இங்கு குறிப்பிடப்படவில்லை. ஊழியர்களின் பாதுகாப்பு தொடர்பில் தொழில் தருநர்களுக்கு எந்தளவு பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டுமோ, அதேயளவு பொறுப்பு அரசாங்கத்திடமும் கையளிக்கப்பட்டுள்ளது. வேலை செய்யும் மக்களின் தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்தல், அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் மற்றும் அந்த தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் ஊழியர்கள் மற்றும் தொழில் தருநர்களுக்கு தெளிவுபடுத்தல்களை ஏற்படுத்தல் போன்றவற்றை வழங்கி அவர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதே தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் பணி ஆகும்.

இந்த அனைத்து வேலைத்திட்டங்களையும் சிறப்பாக மேற்கொள்வதற்கு குழு ரீதியில் தலைமைத்துவத்தை வழங்கிய அமைச்சு மற்றும் நிறுவகத்தின் நிர்வாகக் குழுவுக்கு இச்சந்தர்ப்பத்தில் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதேவேளை, இந்த வேலைத்திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்த உதவிய பங்குதாரர்களான ஊழியர்கள், தொழில் தருநர்கள், அரசாங்க நிறுவனங்கள், அகில இலங்கை ஊழியர் சங்கங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கும் இந்த வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கான ஆதரவினையும் சக்தியையும் வழங்கிய எனது சகோதர அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இத்தருனத்தில் எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

காமினி லொக்குகே

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர்



**தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளர்,**

**தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் தலைவரின் செய்தி**

2014ஆம் ஆண்டுக்கான தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் வரவு - செலவுத் திட்டம் தொடர்பான மத்திய குழுவின் விவாதத்துக்காக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்படும் தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் 2015ஆம் ஆண்டு அறிக்கையை இந்த வெளியீட்டின் ஊடாக உங்கள் கைகளில் சேர்ப்பதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் ஊடாக சுகாதாரமிக்க தொழிற் படையொன்றை உருவாக்க இந்த நிறுவகம் மிகவும் சிறந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளதுடன் சிறந்தவொரு சுற்றுச்சூழலையும் ஏற்படுத்திக் கொடுக்க மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளது. அனைத்து விதமாக தொழில் சார் ஆபத்துக்களை நீக்கிக் கொள்வதற்குத் தேவையான கல்வி மற்றும் பயிற்சிகள், அறிவுறுத்தல்கள் போன்ற பாரிய வேலைத்திட்டங்களை தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம், கடந்த வருடங்களில் வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளது.

இந்த வேலைத்திட்டங்களின் ஊடாக புதிய தொழில் சார் பாதுகாப்பு கலாசாரமொன்றை இந்த தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம் உருவாக்கியுள்ளமை பாராட்டுக்கு உரியமாகும். இந்த அனைத்துவிதமாக வேலைத்திட்டங்களின் ஊடாக நாட்டின் உற்பத்தி மற்றும் வினைத்திறன் என்பன அதிகரிப்பதற்கு தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம் வழிசமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நோக்கங்களை அடைவதற்குத் தேவையான தலைமைத்துவம், சரியான வழிநடத்தல்கள் மற்றும் அனுசரணைகளை வழங்கிய தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொக்குகே அவர்களுக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, இந்த வெற்றி இலக்கை அடைவதற்காக மிகவும் அர்ப்பணிப்புடன் மற்றும் ஒத்துழைப்புடன் சேவை ஆற்றிய தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் மேலதிகச் செயலாளர் உள்ளிட்ட நிறுவனத்தின் அனைத்து முக்கியஸ்தர்கள் மற்றும் நிறுவனங்களின் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் அபிவிருத்தியை முன்னிட்டு அனைத்து விதத்திலும் ஒத்துழைப்புக்களையும் உதவிகளையும் வழங்கிய தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அந்நிறுவகத்தின் நிர்வாகக் குழுவுக்கும் எனது நன்றியை இத்தருணத்திவ் தெரிவித்துக் கொள்கிறேன்.

டபிள்யூ.ஜே.எல்.யூ.விஜயவீர
செயலாளர், தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு
தலைவர், தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகம்



**<u>தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்தின் தகவல்</u>**

சுயநிதி நிறுவனமாக, பக்கச்சார்பின்றி சர்வதேச ரீதியில், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரச் சேவை வழங்கள் மற்றும் பாதுகாப்பு ரீதியிலான சுகாதாரத்துக்கு ஏற்றவகையிலான வேலைத்தளமொன்றை இலங்கைக்குள் உருவாக்கிக் கொடுப்பது மற்றும் பாதுகாப்பான கலாசாரமொன்றை உருவாக்கிக் கொடுப்பதே, தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் இலக்காகும்.

அதற்கமைய, அனைவருக்கும் தொழில் பாதுகாப்பைப் போன்றே நலன்நோம்பு வேலைத்திட்டங்களை வழங்குவதே, எமது எதிர்ப்பார்ப்பாகும். கற்கைநெறிகள், பயிற்சிகள் மற்றும் வேலைத்தளங்களில் இடம்பெறும் அனைத்துவிதமான விபத்துக்களைத் தடுப்பதற்காக, வேலைத்தளங்களில் உள்ள ஊழியர்களின் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்நோம்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோம்.

இன்றைய போன்ற தினத்தில், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவகத்தினால் பெறுமையாகவும் புதினமான ரீதியிலும் முதலாவது தகவல் களஞ்சியம் வெளியிடப்பட்டிருந்தது.

எமது அனுசரணையாளர்களுக்கு, தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவகத்தின் வெளியீடுகள், மிகவும் வரவேற்கத்தக்க சந்தர்ப்பமாகவே, நாம் கருதுகின்றோம்.

தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான புதிய தகவல்களை, தொழிற்றுறைக்கு வழங்குவதே எமது நோக்கமாக அமைந்துள்ளதுடன், தகவல்கள் மற்றும் அறிவைப் பகிர்ந்தளிப்பதன் மூலம், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவனம் மற்றும் எமது வாடிக்கையாளர்களுக்கு இடையில், நிரந்தரப் பாலமொன்று உருவாக்கப்படுகின்றது.

இலங்கையினும், பாதுகாப்பானதொரு கலாசாரத்தை உருவாக்கும் பொறுப்புவாய்ந்த நிறுவனமாக, தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவனம் செயற்பட்டு வருகின்றது. எமது அனைத்துச் செயற்பாடுகள் மற்றும் சேவைகளை, அதிவிசேடமாக முன்னெடுத்துச் செல்வதுடன், எமது சேவைகளை நடைமுறைப்படுத்தும் போது, அனுகூலமான விஞ்ஞான ரீதியினா அறிவு மற்றும் சொத்துக்கள் பயன்பாட்டுக்கு எடுக்கப்படுகின்றன. இலங்கையின் தொழிற்றுறையின் எதிர்காலத்தை கருத்திற்கொண்டு, தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான விசேட சேவையொன்று, எங்களால் வழங்கப்படுவதோடு தேசிய மற்றும் சர்வதேச தொழிற்றுறைகளுக்குள் பயன்படுத்தப்படும் பரீட்சார்த்தமான நடவடிக்கைகள், இந்த தகவல் களஞ்சியத்தின் ஊடாக உங்களிடம் கையளிக்கிறோம்.

நாம், அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து செயற்படும் நிறுவனமாகக் காணப்படுகின்றோம். தேசிய தொழிற்றுறை முதலாளிமார், தொழிலாளர்கள், சர்வதேச

அமைப்புக்கள், பல்கலைக்கழகங்களைப் போன்று, தொழிற்றுறைசார் நிபுணர்களுடன், உலக ரீதியிலான கருத்துக்களின் கீழ், அவர்களுடன் பங்காளர்களாகச் செயற்படுவதுடன், தொழில் அமைச்சின் அனுசரணையுடன் நடவடிக்கைகளை முன்னெடுக்கும் ஒரே நிறுவனம் எமது நிறுவனமாகும். அத்துடன், சேவை வழங்குனர்கள், சேவையாளர்கள் மற்றும் அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து, முத்தரப்பு நிறுவனமாகவும் நாம் எமது தொடர்புகளைப் பேணி வருகின்றோம்.

தோழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவனத்துடன் கைகோர்த்து, எம்முடன் இணைந்து செயற்படுமாறுஈ உங்களுக்கு அழைப்பு விடுக்கின்றோம்.

எமது சேவைகளைப் பெற்றுக்கொள்வது மிக இலகுவானதாகும். எமது பங்காளர்களுக்கு, சாதாரணமானதும் பக்கச்சார்பற்றதுமான சேவையொன்று வழங்கப்படும். எமது இணையத்தளத்தினூடாக, தொழில் பாதுகாப்பு மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பான தகவல்களை, எவரும் பெற்றுக்கொள்ளலாம். எமது உதவியைப் பெற்றுக்கொள்ள விரும்பும் எந்தவொரும் நிறுவனமும், எமது தகவல்களின் ஊடாக, உட்பிரவேசத்துக்கான திட்டமொன்றை வகுத்துக்கொள்ள முடியும்.

ஏம்மால் வழங்கப்படும் எந்தவொரு சேவை தொடர்பிலும், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதரத்துக்கான தேசிய நிறுவனம் பொறுப்புக்கூறும். எமது வேலைத்திட்டங்கள், சர்வதேச மற்றும் தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தரங்களுக்கேற்ப வழங்கப்படுவதுடன் தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் இணைந்ததான எந்தவொரு பிரச்சினைக்கும் எம்மார் தீர்வுகள் பெற்றுக்கொடுக்கப்படுவதுடன் எமது தகவல் களஞ்சியததின் ஊடாக, நிறுவனத்தின் முறையாக அபிவிருத்திக்காக, எமது தரப்பினர், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் தரப்பினராகவும் செயற்படுபவர்.

தோழில் ரீதியான விபத்துக்கள் மற்றும் காயங்கள் தொடர்பில் அவதானிப்போமாயின், நவீன தொழில்நுட்பத்தின் பிரகாரம் செயற்படுமிடத்து ஏற்படும் காயங்களுக்கு முக்கிய காரணம், மனிதாபிமான ரீதியில் ஏற்படும் தவறுகளாகும். அதனால், தொழிற்படை மீது, தொழில்நுட்ப ரீதியிலான பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான கலாசாரமொன்றை நிர்மாணிப்பதற்காக, பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் தொழிர்சார் நோய்கள் தொடர்பில் பூரண அறிவொன்றைப் பெற்றுக்கொள்வது அத்தியாவசியமாகும். அரச நிறுவனங்களைப் போன்று, தனியார் நிறுவனங்களின் உயர்பீட முகாமைத்துவங்களுக்கு, நவீன உயர்ரக அறிவைத் திணித்து, பாதுகாப்பானதொரு வேலைச் சூழலை ஏற்படுத்திக்கொடுப்பதன் முக்கியத்துவம் பற்றி தெரிவிப்பதற்கு, இந்த தகவல் களஞ்சியம் உறுதுணையாக இருக்கும்.

டபிள்யூ.ஜே.எல்.யூ.விஜேவீர
பணிப்பாளர் நாயகம்

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகம

# பொருளடக்கம்

**அத்தியாயம் 1 பக்கம்**


- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் பொது அடையாளம் சார் தகவல்கள் 09
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் தொலைநோக்கு, குறிக்கோள் மற்றும் மதிப்பு 10
- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு 11

**அத்தியாயம் 2**

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் பொது நோக்கம் 13

**அத்தியாயம் 3**

- நிறுவகத்தின் தற்போதைய நிலைமை மற்றும் அபிவிருத்தி நிறுவக ரீதியான உறுதிப்பாடு மற்றும் வளர்ச்சி 15
- எமது பயிற்சி - தரமான முன்னேற்றங்கள் 15 -16
- தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம் அனுஸ்டித்தல் 17
- தோழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான மாநாடு 17
- தோழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 18
- NOSH விசேடத்துவ விருதுகள் - சிறந்த தொழில்சார் விருதுகள் மற்றும் பரிசு வழங்கள் 19
- எமது சுற்றுச்சூழல் ஆய்வுச் சேவை 21
- எமது பிரதான வளர்ச்சிப் படிகள் - எமது இணையத்தளம்
  - தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பாடநெறி 29
  - தோழில்நுட்பப் பிரிவு தாதிகளுக்கான பயிற்சி 30
  - பெருந்தோட்டத் தொழிற்றுறைக்காக உயர் பாடநெறி 30
  - சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் கழிவு முகாமைத்துவம் 31
- மூலதன வெற்றி
- நிதி அறிக்கை 33
- நிதிச் செயல்திறன் தொடர்பான அறிக்கை 36
- கணக்குகள் தொடர்பான பதிவுகள் - நிதிக் கொள்கை 37
- கணக்காய்வாளர் அறிக்கை 39

## அத்தியாயம் 1

## தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் பொது அடையாளம் சார் தகவல்கள்

2005ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28ஆம் திகதியன்று, அரசிலமைப்பின் பிரகாரம் நிறுவப்பட்ட நிறுவனமே, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகமாகும். இருப்பினும், 2009ஆம் ஆண்டில், 2009 இலக்கம் 38இல் அமைந்த சட்டத்தின் பிரகாரம், தொழில் மற்றும் தொழிற்படை அமைச்சினால், இதற்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டன. அறிவை மேம்படுத்தல் மற்றும் முறையான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பினூடாக, அனைவருக்கும் பாதுகாப்பானதொரு வேலைச் சூழலை ஏற்படுத்தி நடத்திச் செல்வதற்கு, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகம், அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. அறிவு, பயிற்சி, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான ஆராய்ச்சிகள், தற்காலத் தகவல்களைப் பகிர்ந்தளித்தலைப் போன்று, ஆலோசனை வழங்களை சேவைகளையும் எமது நிறுவகம் வழங்கி வருகின்றது. அத்துடன், எமது நிறுவனத்தினால், தொழில் தருனர்கள், தொழிலாளர்கள் மற்றும் அனைத்துத் தரப்பினர்களுக்குமான பயிற்சிகள், அறிவுறுத்தல்கள் போன்ற சேவைகளும் வழங்கப்படுகின்றன.

**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பாக குறிக்கோள் :-**
சுய நிதிசார் நிறுவனமொன்றை உருவாக்கி நடத்திச் செல்லல் மற்றும் சர்வதேச ரீதியில், பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் சார் வேலைச் சூழலைப் போன்று பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கலாசாரமொன்றை உருவாக்கல்.

**நோக்கம்:-** தொழில்சார் பாதுகாப்பு மற்றும் நலன்சார் வேலைத்திட்டங்களை வழங்கல்.

**பணி :-** பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலன்சார் திட்டங்களை உறுதிப்படுத்துவதற்காக,
தொழிற்சார் பிரதேசத்தில் ஏற்படக்கூடிய விபத்துக்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்களை வழங்கல், பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் தலையீடுகள் ஊடாக, தொழிலாளர்களின் தைரியத்தை அதிகரித்தல்.

**எமது பெறுமதி :-**

சாதனை :பாதுகாப்பானதொரு கலாசாரத்தை உருவாக்குவது, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் பொறுப்பாகும்.

தரம்: சேவைகளை வழங்குவதற்காக, எம்மால் விஞ்ஞான ரிதியிலான அறிவு மற்றும் சொத்துக்கள் பயன்படுத்தப்படும். எமது சேவைகளை வழங்குவதற்காக, அனுபவம் கொண்ட விசேட நிபுணர்கள் பயன்படுத்தப்படுவர். அதனூடாக, எமது சேவையினை, தரம்மிக்கதாக நடத்திச் செல்ல முடிகிறது. இலங்கை தொழிற்றுறையின் எதிர்காலத்துக்காக, மிகவும் உயரிய சோவையொன்று, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தினால் வழங்கப்படுகிறது.

பங்காளித்துவம்: உள்நாட்டு தொழிற்றுறை, சேவை வழங்குனர்கள், ஊழியர்கள், சர்வதேச அமைப்புகள், பல்கலைக்கழகம் மற்றும் தொழில்சார் பிரஜைகளுடன், உலகக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு, அவர்களுடன் பங்காளர்களாத் தொழிற்பட்டு, தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் அனுசரணையுடன் சேவையாற்றும் ஒரே நிறுவனம், எமது நிறுவனமாகும். மேலும், சேவை வழங்குனர்கள், தொழிலாளர்களைப் போன்று, ஏனைய தரப்பினருடன் ஒன்றிணைந்து, எமது முத்தரப்பு பங்களிப்புக்கான சேவைகளை நாம் வழங்கி வருகின்றோம்.

பிரவேசம் ஆர்வமுள்ள எவரும், எமது இணையத்தளம் ஊடாக, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் சேவைகள் குறித்த தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

செயற்றிறன் எமது வேலைத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

பொறுப்புடைமை சர்வதேச மற்றும் தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சர்வதேச தரங்களுக்கமைய, எமது வேலைத்திட்டங்கள் மேற்பார்வை செய்யப்படுவதுடன், தொழில் நிறுவனத்தில் எழும்' எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு வழங்கப்படும்.

பக்கச்சார்பற்ற சேவை நியாயமான மற்றும் பக்கச்சார்பற்ற சேவையொன்று, எம்மால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இரகசியத்தன்மை எமது நுகர்வோரின் தகவல்களது இரகசியத்தன்மை, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தினால் பாதுகாக்கப்படும் என்று, உறுதிசெய்யப்படும்.

பாதுகாப்பான சூழல் இலங்கை தொழிற்றுறைக்குள், பாதுகாப்பானதொரு கலாசாரத்தை உருவாக்குவதே, எமது குறிக்கோளாகும்.

## தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் நிர்வாகக் கட்டமைப்பு

2009ஆம் ஆண்டு 38ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் தீர்மானங்கள் எடுக்கும் சபையாக, முத்தரப்பு பங்காளராகவுள்ள நிர்வாகத் சபை விளங்குகின்றது. நிர்வாகச் சபையின் அமைப்பு தொடர்பில் 2009ஆம் ஆண்டு 38ஆம் இலக்கச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், 14 அமைச்சுக்களின் உறுப்பினர்களைக் கொண்ட இந்த நிர்வாகச் சபையின் தலைமைத்துவத்தை, தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளரே வகிக்கின்றார். தற்போதைக்கு, கீழ்க் காணப்படும் அமைச்சுக்களின் அதிகாரிகள், சேவை வழங்குனர்கள் மற்றும் தொழில் சங்கங்கள், இதில் அங்கம் வகின்றன.

## நிர்வாகச் சபையின் உறுப்பினர்கள் தொடர்பான தகவல்கள்

## சபையின் உறுப்பினர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1 | எஸ்.எம்.ஜீ.ஜயரத்ன அவர்கள் | செயலாளர | மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு |
| 2 | திரு. எஸ்.எம்.ஜீ.ஜயரத்ன | செயலாளர | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு |
| 3 | திருமதி எம்.டீ.சி.அமரதுங்க | தொழில் ஆணையாளர் நாயகம | தொழில் அமைச்சு, தொழிற்றுறைப் பாதுகாப்புப் பிரிவு |
| 4 | பேராசிரியர் அஜித் டீ அல்விஸ | இரசாயன பொறியியல் திணைக்களம | மொரட்டுவை பல்கலைக்கழகம் |
| 5 | திரு. ஜீ.எம்.கே.ஹெட்டியாரச்சி | தலைவர் | நிதியமைச்சு |
| 6 | திரு. ஏஸ்.ஏ.எஸ்.ருச்சிர விதான | தலைவர | தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சு |
| 7 | பேராசிரியர் டீ.வி.டி.விஜேரத்ன | தலைவர் | தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு |
| 8 | திருமதி. பேராசிரியர் இனோகா சூரவீர | டாக்டர | தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சு |
| 9 | பேராசிரியர் என்.சி.அமரசிங்க | பணிப்பாளர் நாயகம | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகம் |
| 10 | திரு. ஏச்.என்.பி.ஹெட்டி கந்தகே | | |
| 11 | திரு. டபிள்யூ.டீ.பி.பீ.வன்னியாரச்சி | | |

| | | | |
|---|---|---|---|
| 12 | திரு.  டீ.எம்.ஜி.பீ.திசாநாயக்க | | |
| 13 | திரு.  டபிள்யூ.ஏ.டீ.வி.குமார  வீரசிங்க | | |
| 14 | திரு.  எச்.ஐ.ரூபசிங்க | | |
| 15 | திரு.  டீ.சி.என்.கே.தசநாயக்க | | |
| 16 | திரு.  ஜீ.பீ.மல்லவாரச்சி | | |

## அத்தியாயம் 2

<u>தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் பொது நோக்கம்</u>

(அ) தொழிலின் தன்மை மாத்திரமன்றி, தொழில் தருனர்கள் மற்றும் தொழிலாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைக் கருத்திற்கொண்டு, தொழில் தருனர்கள் மற்றும் தொழிலாளர்களின் வேலைத்தளச் சூழல் தொடர்பிலும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசியக் கொள்கையொன்றை உருவாக்க, அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்கல்.

(ஆ) தொழில் நிலையங்களில் தொழில்களில் ஈடுபட்டிருக்கும் போது ஏற்படக்கூடிய காயங்கள் மற்றும் விபத்துக்களைத் தவிர்த்தக்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில், அரசாங்கத்துக்கு வலியுறுத்தல்.

(இ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான விமர்சனங்கள், கல்வித் திட்டங்கள், ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதும் அவற்றுக்கு உதவுதலும்.

(ஈ) உபகரணங்கள், ஆபத்துக்குரிய பொருட்கள், பௌதீக, இரசாய மற்றும் உயிரியல் சார் பொருட்கள் அல்லது உற்பத்தி அல்லது வேறு சில ஆபத்தான விடயங்களை சரியான முறையில் பயன்படுத்தம் முறை தொடர்பில், எந்தவொரு நிறுவனத்துக்கொ அல்லது நபருக்கோ ஆலொசனை சேவையை வழங்குதல்.

(உ) வேறு நிறுவனத்துடன் அல்லது இலங்கையிலோ வெளிநாட்டிலோ உள்ள பல்கலைக்கழகமொன்றுடன் இணைந்து, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான அறிவூட்டல், பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் இருக்கும் தொழில் வழங்குனர்கள், வீட்டிலுள்ளோர், தொழிலாளர்கள் அல்லது வேறு நபர்களுக்குஅறிவூட்டல் அல்லது தேவையான பயிற்சிகளை வழங்கல் மற்றும் அந்த அறிவூட்டல் அல்லது பயிற்சியளித்தலின் பின்னர் அவர்களுக்கு சான்றிதழ்கள் அல்லது டிப்ளோமா சான்றிதழ்களை வழங்குதல்.

(ஊ) உபகரணங்கள், ஆபத்தான் பொருட்கள், பௌதீக, இரசாயன அல்லது உயிரியல் சார் பொருட்கள் அல்லது உற்பத்திகள் அல்லது வேறு ஆபத்துமிக்க பொருட்களை சரியான முறையில் பயன்படுத்தும் விதம் மற்றும் ஆபத்துக்களிலிருந்து விலகிக்கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்கல்.

(எ) (i) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தரம், சட்ட வரையறைகள், நடைமுறைகள் மற்றும் வழிமுறைகளுக்குத் தேவையான அரசியலமைப்பு வரைமுறைகள் தொடர்பில், அமைச்சருக்கு ஆலோசனை வழங்கல்

(ii) வெளிப்பாடு (அணுகல்) தடை விதித்தல், வரையறுத்தல் அல்லது மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள், பொருட்கள் அல்லது அனுயோசனைகளை ஆய்வுக்குட்படுத்தல் அல்லது தீர்மானம் எடுத்தல்.

(ஏ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தகவல்களைத் திரட்டல், திட்டமிடல், பகிர்ந்தளித்தல் மற்றும் பிரசித்தப்படுத்தல் நடவடிக்கைகளை, இணக்கப்பாட்டுடன் முன்னெடுத்தல்.

(ஐ) கருத்தரங்குகள், மாநாடுகள், பயிற்சிகள் அல்லது அது சார்ந்த வேலைத்திட்டங்களை ஏற்பாடு செய்தல் அல்லது அவற்றுக்கு அனுசரணை வழங்கல் மற்றும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தகவல் கையேடுகளை விநியோகித்தல்.

(ஒ) தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான உள்ளக அமைச்சு வேலைத்திட்டம் மற்றும் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பு (coordination) செய்தல்.

(ஓ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான அபிவிருத்தி மற்றும் பரவலாக்கலுக்கான நூலக வசதிகள் மற்றும் இரசாயன ஆய்வுக்கூடங்களை உருவாக்கல் மற்றும் நடத்திச் செல்லல்.

(ஔ) ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் விசேட ஆய்வுக்கூடங்களை ஆரம்பித்தல்

(க) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கு ஏற்ற தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் அல்லது வேறு நிறுவன வலையமைப்புகளுடன் தொடர்புகளைப் பேணல்.

(ங) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தரத்தினை உறுதிப்படுத்தல்.

## அத்தியாயம் 3

## நிறுவனத்தின் தற்போதைய நிலைமை மற்றும் அபிவிருத்தி - நிறுவக ரீதியான உறுதிப்பாடு மற்றும் வளர்ச்சி

தோழிற்றுறைகளுக்கான சேவை வழங்கும் பிரதான சேவை வழங்குநராக, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகம், தனது பெயரைத் தக்கவைத்துக்கொண்டுள்ளது.

## எமது பயிற்சி - தரமான முன்னேற்றங்கள்

தோழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான அறிவு, பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ள ஆர்வத்துடன் உள்ள தொழில் வழங்குனர்கள், தொழிலாளர்கள் மற்றும் வேறு நபர்கள், வேறு நிறுவனத்தினூடாகவோ இலங்கைப் பல்கலைக்கழமொன்றிலிருந்தோ அல்லது வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகமொன்றின் உதவியுடனோ இந்த நிறுவனத்தினூடான அறிவையோ அல்லது தேவையான பயிற்சிகளையோ பெற்றுக்கொண்டால், அதற்கான சான்றிதழ்கள் அல்லது டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பயிற்சி மற்றும் அறிவூட்டல்கள் ஊடாக, தொழிற்றுறைக்குள் பாதுகாப்பானதொரு கலாசாரத்தை உருவாக்குவதற்கதாக, இந்நாட்டின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, கீழ்க்காணப்படும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. குனிஸ்ட பிரிவு அதிகாரிகளுக்குத் தேவையான பயிற்சிகளை வழங்குவதன் மூலம், 2014ஆம் ஆண்டில், தொழிற்றுறை சார்ந்தவர்களுக்கு, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகத்தினால் சான்றிதழ் பாடநெறிகள் மூன்று, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தப் பாடநெறிகளில், சுமார் 80 பேர் கலந்துகொண்டிருந்தனர். இந்த பாடநெறிகளின் காலநேரம், 15 நாட்களாகும். இந்தப் பாடநெறியானது, தொழிற்றுறை 4ஆம் தரத்துக்கு ஏற்றதாகும். இதில் கலந்துகொண்டவர்கள், 2015 ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வின் போது, சான்றிதழ்களையும் டிப்ளோமா சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டனர்.

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தினால், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில், கட்டட நிர்மாணத்துறை ஊழியர்களுக்கான ஒரு நாள் செயலமர்வொன்று ஒழுங்கு செய்யப்பட்டதுடன், இதில், 110 தொழிலாளர்கள் கலந்துகொண்டனர். அவர்களுக்கு, ஒரு வருடத்துக்கான தொழில் சார் பாதுகாப்பு தொடர்பான அடையாள அட்டையும் வழங்கப்பட்டது. இந்தப் பயிற்சிக் காலத்தின் போது, தொழிற்சார் பாதுகாப்பு தொடர்பான பயிற்சிகள் மாத்திரமன்றி, டெங்குக் காய்ச்சல் தொடர்பிலும், அதனைத் தடுப்பது தொடர்பிலான ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

சிரேஸ்ட பாதுகாப்பு அதிகாரிகளுக்காக, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்ளோமா பாடநெறிகள் இரண்டு, இதற்கு சமாந்தரமாக நடத்தப்பட்டதுடன், இதற்கான காலம், ஒரு வருடமாகும். கைத்தொழிற்றுறையில் உள்ள ஊழியர்களின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு, இந்தப் பாடநெறியை வெற்றிகரமாக நடத்திச்செல்ல முடிந்ததுடன், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தினால் நடத்தப்பட்ட பிரதான இரு கற்றைநெறிகளில், கைத்தொழிற்றுறைப் பிரிவின் கற்கைநெறிக்கு நல்ல வரவேற்பு கிட்டியது. இதில் பங்குபற்றியவர்களுக்கு, சர்வதேச தொழிற்சந்தையில் வேலைவாய்ப்பும் கிட்டியது.

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் தேசிய தொழில்சார் நிபுணத்துவம் (NVQ)தரம் 4க்கான சான்றிதழ்கள் மற்றும் டிப்ளோமா பாடநெறி NVQ(தரம் 6) (வரவேற்புச் சான்றிதழ்) சான்றிதழ் பெற்றுக்கொள்ளப்பட்டது.







நுகர்வோரின் கேள்விக்கிணங்க, நபர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்புடைய வேலைத்திட்டங்கள், பயிற்சிக் கருத்தரங்குகள் என்பவற்றை, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தினால் நடத்தப்பட்டது.



# தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம்

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தினால், நிறுவகத்தின் வாடிக்கையாளர்களுடன் ஒன்றிணைந்து, வருடந்தோரும் இந்த தேசிய தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரம் அனுஸ்டிக்கப்படுகிறது. தொழில் வழங்குனர்கள் மற்றும் தொழில் தருனர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டு வேறு சில வேலைத்திட்டங்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இது, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில், இந்நாட்டில் மேற்கொள்ளப்படும் மாபெரும் நிகழ்வாகும். ஒவ்வொரு வருடமும், இந்நிகழ்வு மிகவும் பிரச்சித்தமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## 2014ஆம் ஆண்டு தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான மாநாட்டின் தொனிப்பொருள்




**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான மாநாட்டின் ஒரு பகுதி**
















2014 தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு












தொழிற்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான விசிஸ்ட விருது வழங்கள் - தொழிற்றுறைசார் சாதனையாளர்களுக்கான விருதுகள் மற்றும் பரிசு வழங்கள்












**விருது வகைகள்**

**<u>விசிஸ்ட விருதுகள்</u>**

வகை: பன்னாட்டு மற்றும் தேசிய
விருதுகளின் எண்ணிக்கை: தங்கம்/ வெள்ளி/ செப்பு
மொத்த விருதுடுகள்: 6

**<u>ஒரு பிரிவுக்கான விருது</u>**

வகை: உற்பத்தி, உல்லாசப்பயணத்துறை, நிர்மாணம், விவசாயம், ஆடைத்தொழிற்சாலை,
உணவு, வேறு
விருதுகளின் எண்ணிக்கை: துறைக்கான வெற்றியாளர்

**<u>சிறப்பு விருது</u>**

நிறுவனத்தினால், சிறப்பு விருதுக்கான நிர்மாணம், பூர்த்தி செய்யப்படல் வேண்டும்.
மோத்த விருதுகளின் எண்ணிக்கை: 15 - 20

**அநுகூலத்துக்கான வெற்றி விருது**





**எமது பிரதான ஊக்குவிப்பு முறை - எமது இணையத்தளம்**

தோழிற்றுறை அபிவிருத்தி மற்றும் அவதானம், மத்திய மற்றும் குறை அவதானம் என்ற ரீதியில். அதனை வகைப்படுத்தி, இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை என்ற ரீதியில், தொழிற்சார் பாதுகாப்பு விசிஸ்ட விருது வழங்கல் நடத்தப்படுகிறது. வினாப்பத்திரமொன்று தயாரிக்கப்பட்டு, அதற்கான விடைகளை வழங்குவதற்காக வழிகாட்டல் புத்தகமொன்று தயாரிக்கப்பட்டதன் பின்னர், மே மாதமளவில், தேசிய பாதுகாப்பு விசிஸ்ட விடுதுகள் வழங்கும் பொட்டி நடத்தப்படும். அது, 3 கட்டங்களில் நடத்தப்படும்

1. உறுதிசெய்யப்பட்ட ஆவணங்களுடன் விண்ணப்பத்தை சமர்ப்பித்தல்.

2. தொழிற்றுறையில் காணப்படும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சபையொன்றினால், விண்ணப்பங்கள் ஆராயப்படல்.

3. விசேடமாக, திட்டமிடப்பட்ட மென்பொருட்களைப் பயன்படுத்தி, விசேட நிபுணர் சபையினால் துறைசார் ஆய்வொன்று நடத்தப்படல்.

4. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான புதிய நிர்மாணங்களைத் தெரிவு செய்யும் நோக்கில், Power Point பயன்படுத்தி, தத்தமது அனுபவங்களை முன்னிலைப்படுத்துமாறு வாய்ப்பளித்தல்.

5. விருது வழங்கல் விழா




அது, புதியதொரு வாய்ப்பாகும்.

சர்வதேச தொழிற்றுறை வகைப்படுத்தலுக்கமைய, தொழிற்றுறைகளை வகைப்படுத்துவதன் மூலம், சிறந்த தொழிற்றுறையாளர்களைத் தெரிவு செய்து, அவர்களுக்கு விருதுகள் மற்றும் பரிசில்களை வழங்குதல்.

## <u>எமது சுற்றுச்சூழல் ஆய்வுச் சேவை</u>

இலங்கையின் தொழிற்றுறைகள் தொடர்பில், சுற்றுச்சூழல் ஆய்வு மதிப்பீட்டுச் சேவையொன்றை வழங்குவதற்காக, அதி நவீன உபகரணங்களைக் கொண்டதும் தகுதிவாய்ந்த நிறுவனங்களில் ஒன்றாகவும் தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகமே விளங்குகின்றது. தொழில் வழங்குனர்களுக்கு திருப்தியையும் சுகாதாரத்தையும் பெற்றுக்கொடுப்பதற்காக, தொழிலாளர்களின் வேலை செய்யும் திறனை அதிகரித்துக் கொடுப்பதற்கு, இது உதவுகிறது. தொழிற்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தினால், கீழ்க் காணப்படும் சுற்றுச்சூழல் ஆய்வு மதிப்பீட்டுச் சேவைகள் வழங்கப்படுகின்றன.

தோழில் நிறுவனத்துக்குள் இடம்பெறும் பௌதீக விபத்துக்களை அவதானித்தல்.

- தொழில் நிறுவனத்துக்குள் இடம்பெறும் திகட்டும் வகையிலான சத்தங்களிலிருந்து, தொழிலாளர்களைப் பாதுகாக்கும் நோக்கில், தொழில்சார் பாதுகாப்பு மற்றும்

சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தினால், சத்தம் தொடர்பில் அவதானிக்கப்பட்டு, சர்வதேச ரீதியில் சத்தத்தின் அளவைக் கட்டுப்படுத்துவது தொடர்பான ஆலோசனைகள் வழங்கப்படுத். தொழிற்சாலைக்குள் சத்தத்தை அளவிட்டுப் பார்ப்பதற்காக, கீழ்க் காணப்படும் உபகரணங்கள், எமது நிறுவனங்களினால் பயன்படுத்தப்படுகின்றன.

## HD2110L – Class I integrating Sound level – Portable analyzer

HD2110Lஎன்பது, அங்கும் இங்கும் கையால் கொண்டுசெல்லக்கூடிய சத்தத்தின் அளவை சரியாக கணக்கிடக்கூடிய கருவியாகும். அத்துடன்,Data logging spectrum மற்றும்Statistical அவதானிப்பு வசதிகள் அதில் உள்ளன. இந்த உபகரணங்கள், சத்தத்தை சரியான முறையில் அளவிடும் வகையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

### தொழில்நுட்ப ஒழுங்குவிதிகள்

1ஆம் தரத்துக்குரிய சத்தத்தின் அளவை அளவிடும் கருவி,IEC 61671-1 (அதாவது 37035-OICநம்பிக்கைச் சான்றிதழ்) மற்றும்IEC 60804, 1 தரத்தின்Octave மற்றும் மூன்றாவது ஒக்டெவ் வடிகட்டிகளால் (IEC 61260பிரகாரம்) நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

IEC 61094-4 பிரகாரம், மைக்ரோபோன்கள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

### பயன்படுத்தல்

சத்தத்தின் அளவை மதிப்பிடல் மற்றும் ஆய்வுக்குட்படுத்தும் வேலைத்திட்டம், மூன்றாவது ஒக்டெவ் அலைவரிசையாகக் காணப்படுவதுடன், அதன் உதிரிப்பாகங்களை கண்டறிதல், பணிமிகு நேரங்களின் போது ஒலி சுழற்சி ஒத்திசைவின் ஊடாக, சொரசொரப்பான கருவிகள் மூலம், கேள்திறனை அளவிடல்.

தோழிலிடங்களில் அளவிட்டுப் பார்த்தல் மற்றும் நபர்களை பாதுகாப்பதற்குரிய உபகரங்கள் (SNR, HML மற்றும் OBM முறை)

ஒலிக்காப்பு மற்றும் பாதுகாப்பு

உற்பத்திக் கட்டுப்பாடு மற்றும் இயந்திரங்களிலிருந்து வெளியாகும்சத்தத்தை அளிவிட்டுப் பார்த்தல்

கட்டடக்கலையின் போதான சத்தம் மற்றும் கட்டடங்களை அளவிடல்.

வெப்பநிலையை அளவிட்டுப் பார்த்தல்









## <u>எமது உபகரணங்களின் பிரதான இலட்சனங்கள்</u>

- இந்த உபகரணத்தின் பிரதான இலட்சனமாகக் காணப்படுவது, அதில் QUWSTempoTM 44 Unit உடன் 2” Style globe sensorஒன்று இருப்பதாகும். இதில் தரமான பாகங்கள் காணப்படுகின்றன.
- குறுகிய கால காலநேர இயந்திரத்தின் ஊடாக, நேரங்கள் பதிவான சரியான அறிக்கை பெறப்படும்.
- அதனூடாக, உலர் குமிழிகள்,ஈரமான குமிழிகள் மற்றும் உலக வெப்பநிலை WBGT வீட்டுக்குள்ளும் வெளியேயும் சமமான அறிவில் ஈரப்பதனையும் வெப்பநிலையையும் index/Humidex அளவிட்டுப் பார்ப்பது மேற்கொள்ளப்படுகிறது.

QUWSTempoTM 44 வெப்பநிலை அழுத்த அவதானிப்பு உபகரணத்தின் ஊடாக, உயர் தரத்திலான சேவையொன்று பெற்றுக்கொடுப்பதுடன் குமிழிகளை நடத்திச் செல்வதில் தொந்தரவுகள் ஏற்படுவதில்லை. இந்த மாதிரியின் ஊடாக, உலர் குமிழிகள்,ஈரமான குமிழிகள் மற்றும் உலக வெப்பநிலை, வீட்டு WBGT, சாதாரண ஈரப்பதன் மற்றும் வெப்பநிலை குறியீடு/ஈரப்பதன் குறியீட்டுடன் அளவிட்டுப் பார்த்தல்/ கணக்கிடல் என்பன மேற்கொள்ளப்படும்.

குறுகிய கால காலநேர இயந்திரத்தின் ஊடாக, சரியான அச்சு நேர அறிக்கையை பெற்றுக்கொள்ள முடியும். (DMS)உள்ளon board data logging ஊடாக, புகைப்படப் பதிவுகள், ரேகைப் பதிவுகள் மற்றும் அறிக்கையிடுவதற்கான மாற்றீடுகள் (charting, graphing and reporting options)தகவல் ஆய்வுக்கு இடமளிக்கப்படுகின்றது. எல்கயின் மின்கலம் ஊடாக,Questemp .44 (QT – 44)உபகரணத்துக்கு கீழ்க் காணப்படும் தரமான பாகங்கள் உள்ளடங்குகின்றன.

Sensor Bar Assembly w/calculated wet bulb using Humidity sensor மற்றும் 2 ”வகையிலான உலகப் பொருள்.





தூசுக்களை அளவிடும் உங்களது தேவைக்கேற்ப, தூசுக்களை அளவிடும் உபகரணமும், எமது கட்டமைப்பில் உள்ளடங்குகின்றது. சுற்றுச்சூழல் அளவீடு, கைத்தொழற்சாலைகள் மற்றும் அலுவலகங்களிலுள்ள தூசுக்களின் அளவு தொடர்பில் கண்டறிவதற்காகவும் ஊழியர்கள் அவற்றை அப்புறப்படுத்த எந்தளவுக்கு பாடுபடுகின்றனர் என்பதையும் அறிந்துகொள்வதற்காகவே, இந்த தூசு அளவிடும் கருவி பயன்படுத்தப்படுகிறது.

இவ்வாறான தூசு அளிவிடும் கருவி, தொழில்நுட்ப ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவனரால் ஆராயப்பட்ட நிலையில், பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

தூசின் அளவை அளிவிட்டுப் பார்ப்பதற்காக, யுசைல எனும் உற்பத்தியின் ஊடாக, தூசின் அளவு அளவிடப்படுகின்றது.

தூசை அளவிடும் இந்த உபகரணம், தற்போதைய வரையரைகளுக்கு அமைய நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், அது சர்வதேச தரம் வாய்ந்ததென, உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## உள்ளக தொழில் - வாயு நிலைமையை அவதானிக்கும் நோக்கம்

சுகமானதும், வசதிகளுடனும் பாதுகாப்பானதுமான தொழிற்றுறையொன்றை ஏற்படுத்திக் கொள்வது தொடர்பிலேயே, சகலரதும் அவதானம் செலுத்தப்படுகின்றது. நல்லதோர் வாயு நிலைமையினை உருவாக்குவது, இதில் அடங்குகின்றது. வரவு குறைவதன் ஊடாக, இலக்கப்படும் நாட்கள் தொடர்பில், இதன்போது அவதானிக்கப்படுகிறது. உள்ளக வாயுவின் அவதானிப்பு (7575) என்ற அழைப்பினூடாக, இது தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இதன் மூலம், உள்ளக நிலைமை தொடர்பில் அவதானிக்க முடியும்.



## Kanomax வெளியீடுகள் புதிய IAQ மொனிட்டர் 2212

2211 உபகரணத்தில் அடங்கும் சகல அம்சங்கள் மற்றும் சகல அளவுருக்கள் இருக்க வேண்டிய அளவீடுகளை 2212 கொண்டுள்ளது. அதனைப் போல 2212 உபகரண உற்பத்தியை உருவாக்கிய பொறியியலாளர்கள் ஊடாக இந்த இயந்திரத்தின் ஈரப்பத பகுதியில் இருந்த பயன்பெறும் நேரம் அதிகரிப்பதில் வெற்றிக்கொள்ளப்பட்டுள்ளது.

புதிய பிரமாணத்தை விட வேகமாக்கப்பட்டுள்ளதுடன் 15 விநாடிகளில் சரியான அளவுருக்கள் உருவாக்கப்படும்.

காபனிரொக்சைட் வாயு மற்றும் காபன் மொனோரொக்சைட் வாயுவானது சுற்றுச்சூழலுக்கு எந்தளவு அடங்கியுள்ளது என்பதை மிகத் துல்லியமாக இதன்னுடாக அடையாளம் காணப்பட வாய்ப்பு கிடைத்துள்ளதுடன் அதற்கு அமைவாக சான்றிதழ் பெற முடிந்துள்ளது.

- உட்புற வாயுவின் குணநல தன்மைக்கு ஏற்றவாறு CO, $CO_2$, வெப்பத்தைப் பேணுவதற்கான நடவடிக்கை மற்றும் Data log உள்ளிட்ட பல காரணிகள் இதில் உள்ளன.
- Dew (gdp) Point, வலை குமிழி வெப்பநிலை, முழுமையான ஈரப்பதம் மற்றும் வெளிப்புற காற்று ஈரப்பதம் என்பன கணக்கிடப்படுகின்றன.
- உபகரண தயாரிப்புச் சான்றிதல் உள்ளே அதனை பாவிப்பதற்கான அளவீடுகள் குறித்து சேமித்துக்கொள்ள இடமளிக்கின்றது. RS232C terminalஇனால் ஆனது.





## இந்த உபகரணத்தின் இலட்சனம் மற்றும் அதனைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் பயன்கள்

- $CO_2$ மற்றும் CO வெப்பநிலை மற்றும் ஈரப்பதனை அளவிடல் என்பன, ஒரே தடைவையில் மேற்கொள்ளப்படும்.
- Dew Point ஈரப்பதனான குமிழிகள் மற்றும் வெளிக் காற்றின் சதவீதத்தைக் கணக்கிடும்.
- பாரிய புகைப்படங்கள் அடங்கிய பதாகை
    - 5 அளவீடுகள் வரையில் முன்வைக்கப்படும்
    - திரையில் காணப்படும் தகவல்கள் மற்றும் ஆலோசனைகள்

- VOC'S மற்றும் காற்றின் வேகம் அடங்கிய பன்முகத்தன்மையான உபகரணம்
- ஒரு வினாடியில் லொக் ஆவதன் மூலம், 29 நாட்களுக்கான தரவுகளைச் சேமித்து வைக்கும் வசதிகள் காணப்படுகின்றன.

## தொழில் செய்வதற்கான தகுதிகாண் மதிப்பீடு

தோழிற்சாலைக்குள் வேலைகளில் ஈடுபடுவதற்கான தகுதிகாண் மதிப்படு உறுதிப்படுத்தப்படும் தொழிலாளர்களுக்கான விசேட சேவையொன்று, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தினால் வழங்கப்படுகிறது.

இது, தொழிலாளர்களின் நோயற்ற தன்மையை உறுதி செய்வதுடன், தொழில் நிறுவனத்தின் இலாபத்தையும் அதிகரிக்க, காரணமாகின்றது.

கீழ்க் காணப்படும் சேவைகள், எம்மால் மேற்கொள்ளப்படுகின்றன.

1. ஒவ்வொரு தொழிலாளியையும், வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தல்
2. தொழில்சார் வரலாற்றைப் பெற்றுக்கொள்ளல்
3. உடல் அளவுச் சுட்டி பேணப்படல்
4. ஆபத்தான பொருட்கள் மற்றும் இரசாயத் திரவியங்களை பயன்படுத்துபவர்களாயின் அவர்களுக்கு இரத்த பரிசோதனை மேற்கொள்ளல்
5. நுரையீரல் செயற்பாட்டைப் பரிசோதித்தல்
6. கேள் திறனைப் பரிசோதித்தல்

வைத்தியப் பரிசோதனையில் கலந்துகொண்ட அனைத்து ஊழியர்களுக்கும் தனித்தனியான வைத்திய அறிக்கைகளை வழங்கப்படுவதோடு, ஒவ்வொரு நிறுவனத்துக்கும் வைத்திய அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படும்.

**நுரையீரல் பரிசோதனையை மேற்கொள்ளல்.**



வைத்திய பரிசோதனை மேற்கொள்ளல்





**பிரதான பாடநெறிகள் மற்றும் பயிற்சி வேலைத்திட்டங்கள்**

1. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்ளோமா பாடநெறி
2. தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி
3. கைத்தொழிற்றுறையில் தாதியர்களுக்கான பயிற்சி
4. பெருந்தோட்டத்துறைப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான உயர் சான்றிதழ்
5. சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் கழிவு முகாமைத்துவ வேலைத்திட்டம்
6. நிர்மாணத்துறைக்கான கருத்தரங்குகள்

- **தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்ளோமா பாடநெறி**

தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான டிப்ளோமா பாடநெறிகள் இரண்டு இவ்வருடத்தில் நடத்தப்பட்டன. இப்பாடநெறிகளுக்காக 2014 மார்ச் மாதத்தில், இப்பாடநெறிக்கான விண்ணப்பதாரிகள் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இப்பாடநெறிக்கு தோற்றுவதற்கான மேற்கண்ட தகைமைகளுடன் வெவ்வேறு துறைகளைச் சார்ந்த நிர்வாக அதிகாரிகள் முறைப்படி 44 மற்றும் 32பேர் இணைத்துக்கொள்ளப்பட்டனர். அதேபோன்று, செப்டெம்பர் மாதம் இணைத்துக் கொள்ளப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பாதுகாப்பு துறையைச் சேர்ந்த நிர்வாக தரத்தில் சேவையாற்றுபவர்களாக காணப்பட்டமை சிறப்பம்சமாகும். இந்த பாடநெறி தொடர்பில் எம்மால் மிகவும் நியாயமானதும் பிரயோசனமிக்கதுமான அறிவு வழங்கப்படுகின்ற அதேவேளை, இந்த பாடநெறிக்கு தோற்றுபவர்கள் இரண்டு தொழில்சார் பயணங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுகின்றமை இந்த பாடநெறியின் விசேட அம்சமாகும். அந்தவகையில், மதிப்பாய்வு ஆண்டில் இணைத்துக்கொள்ளப்பட்ட மாணவர்கள் கொழும்பு டொக்யார்ட் நிறுவனத்துக்கும் சீதுவ லோர்ட்ஸ்டார் நிறுவனத்துக்கும் பெப்ரவரி மாதத்தில் தாழில்சார் பயணத்தை மேற்கொண்டனர்.

இம்மாணவர்கள், இந்த பாடநெறியை மிகவும் சிறந்த முறையில் மேற்கொண்டு முடித்ததுடன் அடுத்த குழுவினர் அடுத்த ஆண்டின் முதல் காலாண்டில் பர்டநெறியை நிறைவு செய்யவுள்ளனர். இந்த பாடநெறிறை மேற்கொள்வதன் ஊடாக தாங்கள் தொழில் செய்யவிருக்கும் நிறுவனத்தில் மிகவும் பாதுகாப்பான பணியொன்றை முன்னெடுக்க முடியும். அதேவேளை, அங்கு வேலை செய்யும் ஊழியர்களின் பாதுகாப்புக்கும் இந்த பாடநெறி மிகவும் உறுதுணையாக இருக்கும். இதனூடாக தொழில்பாதுகாப்புஊழியர்களைஉருவாக்கிபல்வேறுதுறைகளுக்குள்ளும்இணைக்கும்பாரியதொரு சேவையை எமது நிறுவனம் வழங்கியுள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறோம். அதேபோன்று, இந்த பாடநெறியை மேற்கொள்வதன் ஊடாக வெளிநாட்டு வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்வதற்கான தகைமையும் கிடைக்கப்பெறுகின்றது. இந்த பாடநெறியை மேற்கொண்ட பாணவர்கள் பலர் தற்போது வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுச் சென்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.





- <u>தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சான்றிதழ் பாடநெறி</u>

2014ஆம் ஆண்டில், தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சான்றிதழ் பாடநெறிகள் இரண்டு நடத்தப்பட்டன. இந்த பாடநெறி ஒன்றின் காலம் 15 வாரங்களாகும். இதில் ஒரு பாடநெறிக்காக 25 மாணவர்கள் கலந்துகொண்டதுடன் அடுத்த பாடநெறியில் 35 மாணவர்கள் பங்கேற்றனர். இவர்கள் அனைவரும் இந்த பாடநெறியை மிகவும் வெற்றிகரமாக பூர்த்தி செய்தனர். இதனால், வேலை ஸ்தலங்களில் ஏற்படக்கூடிய ஆபத்துக்களை குறைக்கக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இந்த பாடநெறியால் பாதுகாப்பானதொரு அதிகாரிகள் சமூகம் **(Safety officers)** உருவாக்கப்பட்டுள்ளது. தொழில்பாதுகாப்புமற்றும்சுகாதாரம்தொடர்பானஅக்கரையுள்ளகல்விப்பொதுத்தராதரஉயர்தரத்தில் சித்தியடைந்த எவரும் இந்த பாடநெறியை மேற்கொள்ள வேண்டும்.






- <u>தொழிற்றுறை தாதியர்களுக்கான சான்றிதழ் பாடநெறி</u>

இந்நாட்டில் வேலை செய்யும் மக்களின் பாதுகாப்புக்காக உருவாக்கப்பட்டுள்ள தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான நிறுவகமானது இந்நாட்டில் வேலை செய்யும் மக்களின் தொழில் சார்ந்த பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் கண்டறிந்து உதவுவதில் பிரசித்தி பெற்றுள்ளது. இதன் பொருட்டு எமது நிறுவனத்தினால் உற்பத்தி, ஆடைக் கைத்தொழில், பெருந்தோட்டத்துறை தொடர்பில் நடத்தப்படும் பாடநெறிகள் போன்று அடிக்கடி நோய்வாய்ப்படல் மற்றும் சுகாதாரத்துக்கு

கேடான தொழிற்றுறைகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு உதவும் வகையிலேயே தொழிற்றுறை தாதியர்களுக்கான சான்றிதழ் பாடநெறியை ஆரம்பிக்க நாம் தீர்மானித்தோம். இந்த பாடநெறியின் முதல் குழு, கடந்த வருடம் வெற்றிகரமாக அதனை நிறைவு செய்தது. 2014ஆம் ஆண்டில், மூன்றாவது குழு, இந்த பாடநெறிக்காக இணைக்கப்பட்டுள்ளனர். 2014 ஒகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்ட இப்பாடநெறியில், மேற்படி தொழிற்றுறைகளை மையப்படுத்திய 6 தாதியர்கள் கலந்துகொண்டு 5 வார காலத்தில் இப்பாடநெறியை நிறைவுசெய்தனர். அவர்களின் பாடநெறிக் காலம் நிறைவடைந்த பின்னர் இரண்டாவது குழு இணைத்துக்கொள்ளப்பட்டதுடன் பாடநெறியும் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டது.





- **<u>பெருந்தோட்டத்துறை தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான உயர் சான்றிதழ்</u>**

பெருந்தோட்டத் துறைக்கான தொழில் சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான உயர் சான்றிதழ் பாடநெறியானது 2014ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட நிலையில், அதில் 13 நிர்வாக அதிகாரிகள் கலந்துகொண்டு 3 மாத கால பாடநெறியை வெற்றிகரமாக நிறைவு செய்தனர். இந்த பாடநெறியானது கோட்பாட்டு ரீதியாகவும் பயன்பாட்டு ரீதியாகவும் மேற்கொள்ளப்படுவதுடன் பாடநெறியை மேற்கொள்ளும் காலப்பகுதியின் போது இரண்டு நாட்கள் துறை சார்ந்த நிறுவனங்களுக்கு விஜயம் செய்து அங்கு அநுபவப் பயிற்சியும் பெற்றுக் கொடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதனூடாக நாட்டில் உள்ள பெருந்தோட்டத்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்த முடியும் என்பதோடு அதற்கான வழிகாட்டியாகவும் திகழ முடிகிறது. தொழிற்றுறை பாதுகாப்பின் ஊடாக தொழில் நிறுவனங்களை மிகவும் சிறப்பான முறையில் மேற்கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.







அத்துடன், தொழிற்றுறை சார்ந்த பதவி உயர்வுகளைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் பெருந்தோட்டத் துறையில் ஈடுபடுபவர்களின் சூழலை சிறந்த முறையில் வடிவமைத்துக் கொடுத்தல் போன்றவற்றை இந்த பாடநெறியை மேற்கொள்வதன் மூலம் சிறப்பாக முன்னெடுக்க வேண்டும். அத்துடன், “தொழில் பாதுகாப்பு உத்தியோகஸ்தர்” என்ற அதிகாரிகள் உருவாக்கப்பட்டு இத்துறைக்கு பலம் சேர்க்கப்படுகின்றது. இதனால், இந்த தொழிற்றுறையின் பெறுமதி அதிகரிக்கப்படுகின்றது. இந்த பாடநெறியை மேற்கொள்வதன் மூலம் இரு தரப்பிலிருந்தும் சுமூகமானதொரு புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள முடிவதால் இந்துறையை சிறந்த முறையில் நடத்துவதற்கு வழிசமைக்கப்படுகிறது. இதுவரையில் இந்த பாடநெறியை மேற்கொண்டவர்களுக்காக தொழிற்துறை ஆலோசனை கையேடுகள் வெளியிடப்பட்டதுடன் அவற்றை பெருந்தோட்டத்துறை கைத்தொழிற்சாலைகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், பாடநெறியை முன்னெடுத்தவர்களுக்கு பாடநெறியின் இறுதியில் வழங்கப்படும் சான்றிதழுக்கு மேலதிகமாக NVQ தரமொன்றையுத் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

- <u>மூலதன வெற்றி</u>

**முக்கியமான மூலதனக் காரணிகள்**

தொழில்நார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தினுடையது

தொழில்சார் பாதுபாப்பு மற்றும் சுகாதாரச் செயற்கபாடுகளுக்கான ஆலோசனைகளுக்குரிய வருமானம், ஊழியர் சபையினருக்கான சம்பளம் மற்றும் அனைத்துச் செலவுகளையும் ஏற்றுக்கொண்டுள்ள நிறுவனமாகும். நிறுவனத்துக்குத் தேவையான மூலதனத் தேவைகள் அனைத்தும், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான ஆலோசனைப் பரிசோதனைச் சேவை (Testing Service)அரசாங்கத்துக்கு வழங்கப்படுகின்றது. 2011 முதல் எதிர்வரும் நான்கு வருடங்களுக்குள் நல்லதோர் வருமானம் ஈட்டப்பட்டுள்ளதுடன் மதிப்பாண்டில் இந்நிறுவனம் பெற்றுக்கொண்ட வருமானமானது, வரலாற்றில் அதிக வருமானத்தை ஈட்டிக்கொண்ட ஆண்டாகும். ஒட்டுமொத்த வருமானம் இலங்கை ரூபாய்ப்படி 20 மில்லியன்களாகும். அது 2013ஆம் ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, 21.85 சதவீத அதிகரிப்பாகும்.




- **கடந்த 3 வருடங்களிலான மொத்த வருமானம்**

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் ஊடாக நடத்தப்பட்ட உயர்மட்ட சந்தர்ப்பங்களின் போது இணைந்துகொண்ட தனியார் பிரிவுகளுடன், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தேசிய நிறுவனத்தினால், சுமூகமானதொரு தொடர்பு பேணப்பட்டு வந்துள்ளது. தனியார்த் துறையினரால், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் உதவிகள் பல்வேறு சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்படுகின்றன. அவர்களின் பல்வேறுபட்ட தேவைகள், தொழில் செய்வதற்கான தகைமை, ஊழியர்களை வைத்திய பரிசோதனைகளுக்கு முன்னிலைப்படுத்தல், தொழிற்சார் திறன்களை மதிப்பிடல் மற்றும் பயிற்சிகள் மற்றும் விழிப்புகளை ஏற்படுத்தல், சுற்றுச்சூழல் பரிசோதனைகளை மேற்கொள்ளல், தொழிற்றுறை சார் ஆய்வுகள் மற்றும் பயிற்சிகள் மற்றும் வைத்திய பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு, அவர்கள் எதிர்ப்பார்க்கின்றனர். தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் கீழ் செயற்படும், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகம், அரசாங்கத்தின் கட்டுப்பாடுகளையும் அவதானத்தில் கொண்டே, செயற்பட்டு வருகின்றது.



தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகத்தின் நிதி நிலைமை
25000000
20000000
15000000
10000000
5000000
0
2011
2012
2013
2014
மொத்த செயற்படு வருமானம்
மொத்த செயற்படு செலவு
மொத்த தேறிய வருமானம்

## நிதி நிலைமை தொடர்பான அறிக்கை

## தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகம்

2014 டிசெம்பர் 31க்கான பத்திரம்

| சொத்துக்கள் | | 2014 (ரூ) | 2013 (ரூ) |
|---|---|---|---|
| **நடப்புச் சொத்துக்கள்** | | | |
| நிதி மற்றும் மாதிரிகள் | குறிப்பு 1 | 3,042,876.75 | 1,136,807.76 |
| பெறவுள்ளவை | குறிப்பு 2 | 3,673,866.94 | 2,329,013.15 |
| அபிவிருத்தி நிதியம் | | 31,781,095.52 | 19,253,243.90 |
| | | 38,497,839.21 | 22,719,064.81 |
| **நடப்புச் சொத்துக்கள் அல்லாதவை** | | | |
| திறைசேரிக் கணக்குகள் | | 267,500.00 | ,267,500.00 |
| தளபாடங்கள், இயந்திரம் மற்றும் உபகரணம் | குறிப்பு 3 | 17,610,593.52 13 | ,881,852.94 |
| மூலதனச் செலவு (அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது) | | - | - |
| முழுச் சொத்துக்கள் | | ------------------------------ | ------------------------------ |
| | | 17,878,093.52 | 14,149,352.94 |
| | | 56,375,932.73 | 36,868,417.75 |
| **பொறுப்புகள்** | | | |
| **நடப்பு பொறுப்புகள்** | | | |
| செலுத்தவேண்டியவை | குறித்து 5 | 3,641,442.14 | 1,481,439.04 |
| மொத்தப் பொறுப்பு | | 3,641,442.14 | 1,481,439.04 |
| தேறிய சொத்துக்கள் | | 52,734,490.59 | 35,386,978.71 |
| **தேறிய சொத்துக்கள்** | | | |
| திரட்டப்பட்ட வருமானம் | குறிப்பு 4 | 52,734,490.59 | 33,736,978.71 |
| | | | 1,650,000.00 |
| | | 52734490.59 | 35386978.71 |

உறுதி செய்வது: 

ஹேரத் யாப்பா
தலைவர்

தயாரிப்பு

பி.எம்.கே.பெரேரா
உ.பணிப்பாளர் (நிதி)

**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகம்**

**நிதிச் செயல்திறன் தொடர்பான அறிக்கை**

**(2014 டிசெம்பர் 31ஆம் திகதி)**

| வருமானம் | 2014 | 2013 |
|---|---|---|
| திறைசேரி நன்கொடை | 10973,676.59 | 5,639,601.93 |
| | 20,383,184.53 | 16,726,943.53 |
| | 31,356,861.12 | 22,366,545.46 |

**குறைப்பு**

**செலவு**

| | | |
|---|---|---|
| நிர்வாகச் செலவு | 9,901,151.84 | 8,344,790.46 |
| மூலதன நிதி | 19,690.00 | 300.00 |
| தேய்மானம் | 1,994,242.33 | 1,299,406.08 |
| மொத்தச் செலவு | **11,915,084.17** | **9,644,496.54** |
| வருடத்துக்கான தேறிய பெறுமதி | **19,441,776.95** | **12,722,048.92** |

# நிதி அறிக்கைக் குறிப்புகள்

## 1. குறிப்பிடத்தக்க கணக்குக் கொள்கைகள்

### 1.1 அறிக்கையிடும் நிறுவனம்

தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவகம், 2005 ஏப்ரல் 28ஆம் திகதியன்று, இலங்கை தொழில் உறவுகள் அமைச்சினால் நிறுவப்பட்டமு. முறையாக சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பில் கொண்டுள்ள அனுபவம் மற்றும் அநுகூலம் ஆகியவற்றை உயர்த்துதல் ஊடாக, பொதுமக்கள் வேலை செய்யும் இடங்களின் சுற்றுச்சூழலை மிகவும் நல்ல நிலைமைக்கு கொண்டுவருவதற்கு, தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துக்கான தேசிய நிறுவனம், அர்ப்பணிப்புடன் இருக்கின்றது. இந்நிறுவனம், கொழும்பு 05, ஜாவத்தை வீதி, இலக்கம் 97இல் அமைந்துள்ள இடத்தில் உள்ளது.

### 1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின் தன்மை

முறையான சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான சட்டதிட்டங்கள் குறித்த அறிவு மற்றும் அநுகூலத்தை உயர்த்துதல் ஊடாக, பொதுமக்கள் வேலை செய்யும் இடங்களின் சுற்றுச்சூழலை மிகவும் நல்ல நிலைமைக்கு கொண்டுவருவது தொடர்பில், இந்நிறுவனம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. புதுப்பிக்கப்பட்ட தகவல்களைப் பகிர்தல் மற்றும் ஆலோசனைச் சேவைகளை வழங்குதலே, இந்த செயற்பாடுகளின் கீழ் முன்னெடுக்கப்படுகின்றன. முதலாளிமார், தொழிலாளர்கள், மக்கள் தொகையினர் ஆகியோர், இது தொடர்பில் பயிற்றுவிக்கப்படுவதுடன், அதனூடாக அவர்கள் பெறும் பயன்களுக்கு மேலதிகமாக, தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறைகளுக்குள் மேற்கொள்ளப்படுகின்ற விமர்சனங்கள், ஆய்வுகள், ஆராய்ச்சிகளின் போது, ஒத்துழைப்புகள் நல்கப்படுகின்றன.

### 1.3 தயாரிப்புக்கான கொள்ளை

(அ) இணக்க அறிக்கைகள்
இருப்புநிலை, வருவாய் அறிக்கை, பங்குகள் தொடர்பான அறிக்கைகள், நிதித் தலைமை அறிக்கைகள் மற்றும் நிதி அறிக்கைகள் தொடர்பான, நிறுவனத்தின் நிதி அறிக்கைகள் அடங்குகின்றன.
இலங்கையில் வரையறுக்கப்பட்ட கணக்காய்வாளர் நிறுவனத்தினால், சிறு முதலீட்டுக்காக வரையறுக்கப்பட்ட கணக்குத் தரங்களுக்கு (SLASSE) அமையாக உருவாக்கப்பட்டுள்ளது.

(ஆ) அளவீட்டுக் கொள்கை
வரலாற்றுச் செலவுகளை அடிப்படையாகக் கொண்டே, நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. பணவீக்கத்தை சாதகமாகக் கொண்ட நிதி அறிக்கைகளில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தப்படவில்லை.

(இ) அலுவலக மற்றும் சமர்ப்பித்தல் செலாவணி நிதி
இந்த நிதி அறிக்கைகள், இலங்கை ரூபாயில் வழங்கப்பட்டுள்ளது. அது, நிறுவனத்தின் செலாவணி நிதியாகும்.

## 2. சொத்து, தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள்

2.1 அடையாளம்காணல் மற்றும் அளவிட்டுப் பார்த்தல்
பொருட்கள், சொத்துக்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுக்கான செலவுகள் மற்றும் ஒட்டுமொத்தக் குறைபாடுகளைக் குறைத்துக்கொள்வதற்குப் பின்னர், அளவீடுகள் மேற்கொள்ளப்படும்.

தளபாடங்கள் அல்லது உபகரணங்களுக்கான செலவுகள், அவற்றிக் கொள்வனவு விலை மற்றும் அவற்றின் தேவைப்பாட்டின் தன்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு செலவு செய்யப்படுகின்றது.

சொத்துக்கள், தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் உதிரிப்பாகங்களை பொருத்துவதற்காக ஒதுக்கப்படும் செலவை வெட்டிவிட்டு, உதிரிப்பாகங்களினால் தொடர்ந்து கொண்டுசெல்லப்படும் பெறுமதியே, மூலதனமாகக் கொள்ளல்

2.1 காலம்

சொத்துக்களின் பாவணைக்கால ஆயுட்காலத்துக்கமைய, வருமான அறிக்கைகளின் பிரகாரம், பயன்பாட்டுக் காலம் கருத்திற்கொள்ளப்படும்

இணைப்பு மற்றும் ஒப்பீட்டு வருடத்தின் அடிப்படையில், மதிப்பீடு செய்யப்பட்ட ஆயுட்காலம், கீழே குறிப்பிடப்பட்டுள்ளது.

| | | வருடம் |
|---|---|---|
| தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் | - | 10 |
| கணினி உபகரணங்கள் | - | 05 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் | - | 10 |
| செவிப்புல கருவிகள் மற்றும் உபகரணங்கள் | - | 05 |
| வைத்திய உபகரணங்கள் | - | 10 |
| வேறு சொத்துக்கள் | - | 10 |

தேய்மானக் கொள்கை : கொள்வனவு செய்யப்பட்ட காலத்துக்கு, தேய்மானம் அறிவிடப்பட மாட்டாது. ஒழுங்கமைப்பு செய்யப்படும் வருடத்தில், தேய்மானம் மதிப்பிடப்படும்.

2.2 நிலையான சொத்துக்கள்:

நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட போது தொழில் அமைச்சு மற்றும் தொழில் திணைக்களத்தினால் கிடைக்கப்பெற்ற சொத்துக்கள், நிறுவனத்திடம் உள்ளன. 2013ஆம் ஆண்டில், சில சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டுள்ளதுடன், தேய்மான மதிப்பீட்டின் பிரகாரம் உதிரிப்பாகங்கள் பொறுத்தப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2.3 புதிய வைத்திய உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்
நெனோ தொழில்நுட்பத்துடன் கூடிய வைத்திய உபகரணமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக,ரூ. 1,650,000.00 பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதுடன், அது 2013.12.31 வரையில் கொள்வனவு செய்யப்படவில்லை என்பதை, ஐந்தொகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

මගේ අංකය
எனது இல.
My No.
எல்எஸ்/சீ/என்ஐஓஎஸ்எச்/எப்ஏ/2014

මබේ අංකය
உமது இல.
Your No.

දිනය
திகதி
Date
2015 செப்தெம்பர் 17

தலைவர்,
தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகம்

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிசார் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவக அதிகாரச்சட்டத்தின் 17(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு 2015 யூன் 18 ஆந் திகதியன்று வழங்கப்பட்டது.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டுக் நியமம் 01

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சொத்துக்களும் பொறுப்புக்களும் வருமானங்கள் மற்றும் செலவினங்கள் என்பன விசேட சந்தர்ப்பத்தின் போது தவிர ஈடுசெய்யப்பட முடியாத போதிலும், மீளாய்வாண்டில் கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 36,220,884 தொகையான வருமானத்திலிருந்து ரூபா 14,694,860 தொகையான செலவினங்கள் ஈடுசெய்யப்பட்டு தேறிய மீதி ரூபா 20,383,184 வருமானமாக நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ஒவ்வொரு வருமான மூலம் பொருண்மையாக இருக்கையில் நிதிக்கூற்றுக்களில் வெவ்வேறாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், உயர் சான்றிதழ் பத்திர பாடநெறியிலிருந்து கிடைத்த ரூபா 1,229,401 ஆன வருமானம் தொழில்நுட்ப பாடநெறி வருமானத்திலும், மருத்துவ பரிசோதனைக்காக கிடைத்த ரூபா 1,424,000 ஆன வருமானம் மற்றும் தேசிய தொழில்தகைமை பாடநெறி நியமங்கள் நிகழ்ச்சித்திட்டத்திற்கான ரூபா

1,474,533 வருமானம் ஏனைய ஒப்பந்த செயற்பாடுகளிலிருந்து கிடைத்த வருமானத்திலும் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) நிறுவனத்தால் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றொன்று தயாரித்து சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது திறைசேரியிடமிருந்து மூலதனச் செலவினத்தை மேற்கொள்வதற்காக 2010 ஆம் ஆண்டிலிருந்து கிடைத்த ரூபா 16,151,975 தொகை மூலதன மானியமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டினுள் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சிடமிருந்து மீள்நிரப்பப்பட வேண்டிய நிறுவனத்தால் செலவிடப்பட்ட ரூபா 3,115,432 தொகையான மூலதனச் செலவினம் மற்றும் ரூபா 2,387,532 தொகையான மீண்டுவரும் செலவினம் பெறவேண்டிய தொகையாக கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 5,813,827 ஆன நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 3,728,741 ஆக காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது கொண்டு வரப்பட்டிருந்ததுடன், ரூபா 10,000 ஆன சில்லறைக்காசு மீதி விடுபட்டிருந்தது. ஆதலால் காசுப் பாய்ச்சல் கூற்றின் சரியான தன்மை தொடர்பாக திருப்தியடைய முடியாதிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவக | நிறுவகத்தினால், நிறுவகத்தின் நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையொன்று தயாரித்து குறித்த ஆண்டிற்கு பின்னர் வரும் ஆண்டு |

| | | |
|---|---|---|
| | அதிகாரச்சட்டத்தின் 18 பிரிவு | முடிவடைவதற்கு முன்னர் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டிற்கான அவ்வறிக்கை கணக்காய்வு திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் | |
| | 11 ஆம் பிரிவு | நிறுவகத்தின் மிகை நிதியினை, நிதி அமைச்சரின் இணக்கப்பாட்டுடன் முதலீடு செய்து வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமான மீதி ரூபா 3,032,877 ஆக இருந்தது. |
| (இ) | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றிக்கை | நிறுவகத்தினால் கணனிகள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக சொத்து பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதியளவான அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

நிறுவகத்தினால் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகள் செலுத்துவதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படாமல் மீளாய்வாண்டிற்காக பதவியணியினருக்கு ரூபா 397,602 தொகை ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளாக செலுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவகத்தின் செயற்பாட்டு விளைவு ரூபா 19,441,777 மிகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 12,722,049 ஆக இருந்தமையால் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 6,719,728 ஆன முன்னேற்றமொன்றைக்

காட்டியது. மிகையில் அதிகரிப்பிற்கு அரசின் மானியம் ரூபா 8,990,316 ஆலும் செயற்பாட்டு வருமானம் ரூபா 2,270,588 ஆலும் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பணிப்பாளர் சபைக் கொடுப்பனவு செலுத்துவதற்காக அடிப்படையாக கொள்ளப்பட வேண்டிய 2011 ஏப்ரல் 29 ஆந் திகதிய பீஈடி 58 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 1.2 ஆம் பந்தியின் பிரகாரம் இந்நிறுவனம் குறித்த வகைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு இருக்கையில் பணிப்பாளர் சபைக் கொடுப்பனவு செலுத்துவதற்குரிய ஏற்பாடுகள் தொடர்பான விளக்கங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தற்போது நிறுவகம் நடாத்திச் செல்லப்படும் அமைச்சிற்குரிய கட்டிடத்தை உரித்தை நிறுவகத்திற்கு கையேற்கவோ அல்லது வாடகை கொடுப்பனவு தொடர்பாக அமைச்சுடன் உடன்படிக்கையொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவகத்தினால் 03 சான்றுப்பத்திர பாடநெறிகள் நடாத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும், பாடநெறிக்கு விண்ணப்பித்த மற்றும் திருப்திகரமாக பூர்த்தி செய்த சான்றிதழ்களை உரித்தாக்கிக் கொண்டவர்களின் விபரங்கள் உள்ளடக்கப்பட்ட பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. இதனால் பாடநெறிகளை நிறைவுசெய்து சான்றிதழ்களை உரித்தாக்கிக் கொண்டவர்களின் சான்றிதழ்களை உறுதிப்படுத்துவது சிக்கலாக இருந்தது.

(ஈ) பணிப்பாளர் சபை அங்கத்தவர்களின் பதவிக்காலம் 2015 மார்ச் 21 ஆந் திகதி பூர்த்தியடைகின்ற போதிலும், அவ்வங்கத்தவர்கள் 2014 நவம்பர் 25 ஆந் திகதியின் பின்னர் நிர்வாக சபைக் கூட்டங்களுக்கு சமூகமளித்திருக்கவில்லை.

### 4.2 பதவியணியினர் முகாமைத்துவம்

நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

7

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 13 பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 25 ஆக இருந்ததுடன், தற்போதுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை 15 ஆகும். இதன் பிரகாரம் காணப்படும் 10 வெற்றிடங்களை நிரப்புவதற்கு கணக்காய்வு திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அவ்வெற்றிடங்கள் தொடர்பாக முன்னைய ஆண்டுகளின் போதும் சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன், நிறுவகத்தின் சில பிரிவுகளின் நடவடிக்கைகள் இவ்வெற்றிடங்களை நிரப்பாமையால் செயற்பாடற்று இருந்தமை அவதானிக்கப்பட்டது. அத்தியவசியமான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமையால் நிறுவகத்தின் நோக்கத்தை உரிய வகையில் நிறைவேற்றுவதில் சிக்கல்கள் ஏற்படக்கூடுமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

ஆண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளின் மூலம் பௌதீக இலக்குகள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், நிதி இலக்குகள் வழங்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

நிறுவகத்தின் மதிப்பிடப்பட்ட வருமானங்களையும் செலவினங்களையும் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவினங்களுடன் ஒப்பிடும் போது 31 சதவீதத்திலிருந்து 515 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)